மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ

S.S. … செட்டியார்
நியூஸ் ஏஜண்டு
… தர்மபுரி, (சேலம் Dt)

உயர்த்திவிட்ட போர்க் கொடி இன்னும் தாழ்த்தப்படவில்லை என முழங்கும் கலைஞர் கருணாநிதி

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 21—8—60 ஒலி 42

மீண்டும் கறுப்புக் கொடி வேண்டுமா!

நமது நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம், சென்னை சட்ட மன்றக் கூட்டத்தில் நம்மை வெகுவாகப் பாராட்டிப் பேசி இருக்கிறார்! "திராவிட முன்னேற்றக் கழகம் கிளர்ச்சியை கைவிட முடிவு செய்தது மிகவும் பாராட்டத் தக்கது—தமிழ் மக்களின் அறிவுக்கே இது ஒரு சான்றாகும்" என்று பெருமையோடும், பூரிப்போடும், புன்னகை தவழும் முகத்தோடும் நம்மை வாயாரப் புகழ்ந்துப் பேசி இருக்கிறார்! இப்போதாவது நம்மைப் புரிந்து கொண்டு பாராட்ட முன் வந்ததற்காக, நிதியமைச்சரை நாமும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்!

"திராவிட முன்னேற்றக் கழகம் கறுப்புக் கொடிக் கிளர்ச்சியைக் கை விட்டது, தமிழ் மக்களின் அறிவுக்கே ஒரு சான்று" என்று கூறி, நமக்குப் பெரு மதிப்பளித்து, நம்முடைய பண்பையும், அரசியல் நாகரீகத்தையும் தெரிந்து கொண்டு, அதை நாட்டு மக்களுக்கும் எடுத்துச் சொல்வதற்காக அவரை மீண்டும், மீண்டும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்!

தமிழ் மக்களுடைய நல்ல பண்பிற்கும், அன்பிற்கும் அறநெறிக்கும், நல்ல நாகரீகத்திற்கும், ஒப்பு உயர்வில்லா உயர்ந்த குணத்திற்கும், ஈடும் இணையுமில்லாத சிறந்த அறிவிற்கும் நம்மை ஒப்பிட்டுக் காட்டி இருக்கிறார்; நம்மைச் சான்று வைத்துக் கூறி இருக்கிறார்—திராவிட முன்னேற்றக் கழகத்தை உதாரணமாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்! தமிழ் மக்களின் சிறந்த அறிவிற்கு நாம் தான் சான்று என்று கூறி இருக்கிறார்!

உண்மையிலேயே நிதி அமைச்சர், நம்மிடத்தில் இத்தனை மதிப்பு, இத்தனை மரியாதை, இத்தனை உள்ளன்பு, இத்தனைப்பற்று, இத்தனை பாசம் வைத்திருப்பார் என்று நாம் நினைக்கவே இல்லை!

வெளியிலே திட்டுகிறார், "நாம் தான் வைரி" என்றும் நினைக்கிறார்! ஆனால் உள்ளுக்குள்ளே நம்மீது இத்தனை பாசமா? நம்மால் நம்பவே முடியவில்லையே! நிதி அமைச்சர் எதற்காகப் பாராட்டினாலும், எதற்காகப் புகழ்ந்தாலும்—எந்த வகையிலேயோ நம்மைப் பற்றிப் புரிந்து கொண்டதற்காக நாம் அவரை நிச்சயமாகப் பாராட்டத் தான் வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகம் கறுப்புக் கொடி காட்டி இருந்தால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கும், ஆட்சியாளர்களுக்கு எத்தனை களங்கம் ஏற்பட்டிருக்கும் என்பதை அவர் உணர்ந்த காரணத்தால் தான் நம்மை இப்படிப் பாராட்டி இருக்கிறார்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் வலுவை அதன் பொலிவை, அதன் சக்தியை உணர்ந்து கொண்டிருக்கும் காரணத்தால் தான் நமக்கு இத்தனை மதிப்பளித்திருக்கிறார்!

அமைச்சர் உணர்ந்து கொண்டிருப்பதுபோல் அவரது சிஷ்ய கோடிகள் உணரவில்லையே, என்பதற்காக நாம் வருத்தப்படத் தான் வேண்டியிருக்கிறது!

ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் பெரியவர்கள் அளித்த உறுதி மொழிகளுக்கும், விடுத்த வேண்டுகோளுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத் தான் நாம் கறுப்புக் கொடி நிகழ்ச்சியை நிறுத்தி வைத்தோம்! இதை பலர் கோழைத் தனம் என்று சொல்லுகிறார்கள்! சரணாகதி அடைந்து விட்டதாகக் கூறுகிறார்கள்!

வீதியிலே செல்லுபவர்கள் வேடிக்கைப் பேசுகிறார்கள், ஓரத்திலே செல்பவர்கள் நையாண்டி புரிகிறார்கள், கூலிக்கு கொடி பிடிக்கிறவர்கள் கொக்கரிக்கிறார்கள், வேளைச் சாப்பாட்டிற்கு "ஜே" போடுகிறவர்கள் ஜல்லடம் கட்டுகிறார்கள்! பரவாயில்லை, சில்லறைகளைப் பற்றி நாம் கவலைப்படவில்லை!

சட்ட மன்றத்தில் வீற்றிருப்பவர்களும், பெரும் பொறுப்புகளை வகிப்பவர்களும், பெரிய மனிதர்கள் என்று கருதப்படுபவர்களும் கூட நம்மை கேலி செய்கிறார்கள்! நக்கல் செய்கிறார்கள், நையாண்டிக் காட்டுகிறார்கள்! இது எத்தனை வேதனை அளிக்கிறது, இது எத்தனை வெறுப்பை உண்டாக்குகிறது! புரியாது, இது அவர்களுக்குத் தெரியாது—பாவம். கொள்கையில் உறுதி இருந்தால தானே அவர்களுக்குப் புரியும்!

உணர்ச்சியும், எழுச்சியும் மிக்க இளைஞர்களுக்கு இது எத்தனை ஆத்திரத்தை ஊட்டுகிறது, இது எத்தனை உணர்ச்சியை ஊட்டுகிறது!

துடிக்கும் தோள்கள், வெடிக்கும் எரிமலை உள்ளங்கள் என்ன பாடுபடும் தெரியுமா? எங்கே தெரியப் போகிறது, உணர்ச்சியற்ற மரக்கட்டைகளுக்கு!

"கண்களை இழப்போம், கரங்களை இழப்போம், உயிரையும் இழப்போம்" என்ற உறுதி மிக்க இளைஞர்களைப் பழிப்பதற்கு என்ன தைரியம்? எப்படி வந்தது இந்தத் துணிவு?

உங்களுக்கெல்லாம் அபயம் தர, அறிவுலக மேதை எங்கள் அண்ணா இருக்கிறார் என்ற தைரியமா?

ஏசினாலும், பேசினாலும்—தூற்றினாலும், திட்டினாலும், பழித்தாலும், பழி சுமத்தினாலும் — கண்ணியத்தை மறவாமல கடமையை செய்திடும் ஒரு உத்தமரை தலைவராகப் பெற்றிருக்கிறோம் என்ற தைரியமா?

'உதைத்தால் வாங்கிக் கொள், அடித்தால் அன்பாகப் பேசு" என்று கூறிடும், ஒரு பேரறிஞரின் கட்டளையை ஒரு துளியும் மீற மாட்டோம் என்ற துணிவால உங்களுக்கு இந்தத் தைரியம் வந்ததா?

"அண்ணா! எங்களை ஏசுகிறார்கள், பேசுகிறார்கள்—கோழை எனகிறார்கள், மோழை என்கிறார்கள், பேடி என்கிறார்கள் நாடி நரம்பற்றவர்கள் என்கிறார்கள்! நாங்கள் அப்படிப்பட்டவர்களா? சொல்லுங்களண்ணா!

எங்களை சோற்றுப் பிண்டங்கள் என்கிறார்கள்—சோற்றுக்காகவே பிறந்தவர்கள்! இதை யெல்லாம் நாங்கள் கேட்கத் தான் வேண்டுமா? சொல்லுங்களண்ணா சொல்லுங்கள்!

வெட்டி வா என்றால் கட்டி வருவோமே! அது அந்தப் பித்தர்களுக்குத் தான் தெரியாது—உங்களுக்குமா தெரியாது?

(8 ம் பக்கம் பார்க்க)

நமது போர்க் கொடி இன்னும் இறங்கவில்லை! அது பறந்து கொண்டுதான் இருக்கிறது!

நம்மை அலட்சியப்படுத்திய டில்லித் தருக்கர்கள் அடிபணிந்து விட்டனர்!

20.8.60 தாமமணி

வாக்குறுதி நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் போர்ப்பறை ஒலிக்கும்!

சென்னை கடற்கரையில் சொல்லின் செல்வர் ஈ.வி.கே. சம்பத் எச்சரிக்கை!

சென்ற 7-8-60ம் தேதி மாலை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற வெற்றி விழாக் கூட்டத்தில் போராட்டக் குழுத் தலைவரும், டில்லி மக்கள் சபை உறுப்பினரும் கழகப் பெருந்தலைவர்களில் ஒருவருமான ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் நீண்ட ஆரவாரத்திடையே பேசியதாவது:- அருமை அண்ணா அவர்களே! அன்புள்ள தலைவரவர்களே! நண்பர்களே தாய்மார்களே!

நாமெல்லாம் இங்கே பெருமகிழ்வோடும், களிப்போடும், உற்சாகத்தோடும் இன்று கூடுவோம், நாம் இந்த, வெற்றி விழாவைக் கொண்டாடுவோம் என்று நம்மில் எவரும் எண்ணிப் பார்த்திருக்க மாட்டார்கள்

சென்ற வாரம் இதே நேரத்தில் கோடம்பாக்கத்தில் கூடினோம். அந்த நாம் ஒரு முடிவை எடுத்தோம். அதன்படி நாம் நடக்க முயற்சி எடுத்துக் கொண்டிருந்திருந்தால் இன்று சிறையில் கம்பிகளை எண்ணிக் கொண்டிருப்போம். மாலை 5 மணியானால் கஞ்சி கலயத்தை ஏந்தி அதில் ஊற்றும் கஞ்சியைக் குடித்துக் கொண்டிருப்போம். மீண்டும், மீண்டும் கம்பிகளைப் பிடித்து நின்று கொண்டிருப்போம். ஆனால் அதற்கு மாறாக இன்று கடற்கரையில் நல்ல காற்று வாங்கிக் கொண்டு களிப்புக் கடலில் மூழ்கி வெற்றி விழாக் கொண்டிருக்கிறோம்!

சென்ற சில தினங்களாகவே அரசியல் வானில் வேகமானதும், பரபரப்பானதும், ஆர்வமிக்கதுமான நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு வந்தது. அந்த நிகழ்ச்சிகள் நாமெல்லாம் பின்பற்ற முடியாத நிலையில் ஓடிக் கொண்டிருந்தது! அந்த நிகழ்ச்சிகள் எல்லா வட்டாரத்திலுள்ள மக்களிடையேயும் ஓர் அதிர்ச்சியை உண்டாக்கி வந்தது!

நாம் குமாரபாளையத்தில், நமது பொதுக் குழுவையும், செயற் குழுவையும் கூட்டினோம். அங்கு நாம் இந்தியைப் பற்றி குடியரசுத் தலைவர், விடுத்திருக்கும் தாக்கீதை ஆகஸ்ட் 30ம் தேதிக்குள் திருப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும். இன்றேல் 31ம் தேதி கண்டன நாள் கொண்டாட வேண்டும். பின் பெரும் போராட்டத்தை நடத்த வேண்டும் என்று முடிவு செய்து, ஒரு குழுவை ஏற்படுத்தினோம், நமது தீர்மானத்தின் நகலை குடியரசுத் தலைவர் பாபு இராசேந்திர பிரசாத்துக்கும், இந்தியப் பிரதமர் பண்டித நேருவுக்கும், இந்திய உள் நாட்டமைச்சர் கோவிந்த வல்லப பந்திற்கும், சென்னை முதலமைச்சர் காமராசருக்கும், நிதி யமைச்சர் சுப்பிரமணியத்திற்கும், சென்னை உள்துறை அமைச்சர் எம். பக்தவத்சலத்திற்குமாக ஆறு கடிதங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தோம்!

அப்படி அனுப்பி வைத்த கடிதங்களுக்கு குடியரசு தலைவரின் செயலாளரிடமிருந்து மட்டும் கடிதம் கிடைக்கப்பட்டது என்ற கடிதமும், பதவி செய்து அனுப்பிய அட்டையும் கிடைக்கப் பெற்றது மற்றவர்களிடமிருந்து ஒருவித பதிலும் இல்லை! ஆனால் கடிதம் கிடைத்தது என்று அறி

இந்தி எப்பக்கம் வந்தாலும் எதிர்த்து முறியடிப்போம்!

பலமான போர்ப்படை அணிவகுத்தே நிற்கிறது !

அலட்சியப் படுத்தினால் ஆபத்து தான் !

ஆணவத்தோடு பேசிவந்த நிதியமைச்சர் கனிவோடு கெஞ்சுகிறார் !

தாசர்புத்தி தலைக்கேறிய தமிழ் நாட்டு அமைச்சர்கள் இனியாவது தவறை உணர்ந்து பாடுபட வேண்டும் !

விக்கும் அட்டை மட்டும் கிடைத்தது!

நாம் நமது குமாரபாளையம் முடிவுப் படி 31ம் தேதி கண்டன நாள் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகப் பட்டி தொட்டிகளெல்லாம் சென்று பேசிக் கொண்டும் அதற்கான வகைகளைச் செய்து கொண்டும் வந்தோம்! அந்த நேரத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் பாபு இராசேந்திர பிரசாத் தமிழகத்தில் சுற்று பிரயாணம் செய்ய வருகிறார் என்ற செய்தி வந்தது. அவரை வரவேற்பதற்கான பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டு தமிழக மக்களின் வரிப்பணத்தில் வாழ்ந்து வரும் எட்டு அடிமைகள் அவரை 'வரவேற்க ஏற்பாடுகள் செய்தார்கள்!

தென்னகத்து மக்களின் கோரிக்கைகளுக்கு இணங்காது, தென்னகத்து மக்களின் நலனுக்காகப் பாடு படும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரின் கடிதத்திற்குப் பதில் எழுதாத, குடியரசுத் தலைவர் தமிழகத்திற்கு வருவதை தமிழர்கள் விரும்பவில்லை! இதைக் கண்டு மிகவும் வருந்தினார்கள்!

இந்த நிலையில் போராட்டக் குழுத்தலைவன் என்ற முறையில் நான் குடியரசுத் தலைவருக்கு மிக விளக்கமான முறையில் ஒரு கடிதம் எழுதினேன்! அந்தக் கடிதத்தில் "தென்னக மக்கள் இன்று மிகவும் கொதிப்படைந்திருக்கிறார்கள்! அவர்களது கோரிக்கைகளுக்குப் பதிலளிக்காது தமிழகத்துக்கு நீங்கள் வருவது சரியல்ல தக்க பதிலளித்து விட்டு தமிழகத்திற்கு வாருங்கள் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்!

உடனே நமது செயற்குழு கூடியது. இது குறித்து நீண்ட நேரம் விவாதிக்கது. அதற்குப் பின் தான் நாம் கோடம்பாக்கத்தில் கூடினோம்.

நமது அண்ணா அவர்கள் அந்த மாநாட்டில குடியரசுத் தலைவருக்கு கறுப்புக் கொடி காட்டுவதென்ற முடிவைத் தெரிவித்து, நம்மிடம் கறுப்புக் கொடியைக் கொடுத்தார்!

நமது அண்ணா அவர்கள் இனி நமக்கு இதைத் தவிர வேறு வழி இல்லை என்பதைத் தெரிவித்து கறுப்புக் கொடி காட்டுவதன் அவசியத்தை விளக்கினார். அந்த முடிவை நாமெல்லாம் ஏற்றோம். அதற்குத் தயாரானோம்.

நாம் கோடம்பாக்கத்தில் செய்த முடிவை பத்திரிகைகள் பெரிதாக வெளியிட்டன. எங்கும் பரபரப்பை உண்டாக்கியது. டில்லியிலுள்ளவர்களெல்லாம் துடி துடித்தார்கள். நம் கோரிக்கைகளைத் துச்சமென மதித்து வந்தவர்கள் கவனம் செலுத்த முற்பட்டார்கள். அலட்சியப் படுத்தி வந்தவர்கள் நம் கோரிக்கையைப் பற்றிப் பேச முனைந்தார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் பிராங்க் அந்தோனி இந்த மாதம் 1ம் தேதி பாராளுமன்றத்தில் குடியரசுத் தலைவரின் தாக்கீதில், பிரதமர் நேருவின் வாக்குறுதி கையாளப்படுமா? மீறப்படுமா என்ற கேள்வியைக் கேட்டார்.

அதற்கு மத்திய சர்க்காரின் உள் நாட்டமைச்சர் பந்த், "பிரதமர் நேருவின் வாக்குறுதி மீறப்படமாட்டாது அது நிறைவேற்றப்படும் என்றும் இந்திபேசாத மக்களின் மீது இந்தியை கட்டாயமாக திணிக்கப் படமாட்டாது என்றும் விளக்கமாகப் பேசினார்.

இந்த மாதம் இரண்டாம் தேதி இந்த மாநிலத்து நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவசர அவசரமாக பத்திரிகை நிருபர்கள் மாநாடடைக் கூட்டினார். பத்திரிகை நிருபர்களிடம் குடியரசுத் தலைவரின் தாக்கீதை விளக்கினார்! பலமான வாக்குறுதியை அளித்தார். எதற்கும் பணிவான முறையில் பேசாத சுப்பிரமணியம் பணிந்து பேசினார்; கெஞ்சினார்.

என்னை டில்லிக்குப் போகும்படி நமது அண்ணா அவர்கள் கட்டளையிட்டார்கள். அதன்

(9ம் பக்கம் பார்க்க)

மாலை மணி மலர்

விற்பனையாளர்கள் கவனிக்கவும்!

இந்தி எதிர்ப்பு மலர் எல்லா விற்பனையாளர்களுக்கும் சென்ற 5-8-60ம் தேதியன்றே அனுப்பி வைக்கப் பட்டுவிட்டது!

"11-8-60ம் தேதி வரையில் மலர் கிடைக்கவில்லை" என்ற புகார் கடிதங்கள் எழுதிய வண்ணம் இருக்கின்றனர்! என்ன காரணம் என்று எங்களுக்குப் புரியவில்லை!

மாலைமணி எந்த காலத்திலும் இப்படி தாமதமாகக் கிடைத்ததே இல்லை! இப்போதைய தாமதத்திற்கு என்ன காரணமோ? அஞ்சல் நிலையத்தார் இதற்கென்ன பதில் சொல்வார்களோ? புரியவில்லை!

இதுபற்றி சென்னை தலைமைத் தபால் அதிகாரிக்கு புகார் செய்திருக்கிறோம்! அதற்குத் தக்கப் பரிகாரம் செய்வார் என்றும் நம்புகிறோம்!

விற்பனையாளர்களுக்கு ஏற்பட்ட வீண் சிரமத்திற்காக எங்களை மன்னிக்க வேண்டுகிறோம்!

நிர்வாகி,

மாலைமணி

ஆகஸ்டு 15

நமக்குச் சுதந்திரத் திருநாள் அல்ல !

ஆங்கிலம் பேசும் வெள்ளைக்காரன் ஒழிந்தால் போதுமா ?

இந்தி பேசும் வடவர்களும் ஒழிய வேண்டாமா ?

இவ்வாண்டு சுதந்திர தின விழா, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும்-வங்கம் நீங்கலாக எங்கும் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது! எங்கும் போல் சென்னையும் மிகச்சிறப்பாகவே கொண்டாடி இருக்கிறது!

மகர தோரணங்களைக் கட்டி மின் விளக்குகளை ஏற்றி, கொடிகளை உயரே பறக்க விட்டு-பாபு ராஜேந்திர பிரசாத்தின் மனம் மகிழ, காங்கிரஸ் அமைச்சர்கள் விழாக் கொண்டாடி பூரிப்படைந்திருக்கின்றனர்.

எந்த ஆண்டும் இல்லாத மகிழ்ச்சி காங்கிரஸ்காரர்களுக்கு இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது 'வடக்குமில்லை, தெற்குமில்லை-எல்லாம் ஒன்று" என்று எடுத்துக்காட்ட ஜனாதிபதி சென்னை வந்திருக்கிறார், சுதந்திர தின விழாவிலும் கலந்து கொண்டிருக்கிறார் என்று பெருமைப்பட்டுக் கொள்ளுகிறார்கள்.

பாபு ராஜேந்திர புரசாத் உபதேசம் செய்த ஐக்கியத்தைப் பற்றி சொல்லிச்சொல்லி மகிழ்கிறார்கள்! மகிழ்ச்சியில் நாங்கள் குறுக்கே நிற்கவில்லை.

கொடியை உயர்த்தி. வந்தே மாதரம் பாடி, ஜெய்ஹிந்சொல்லி விழாக் கொண்டாடி மகிழ்வதை நாங்கள் தடுக்கவில்லை. வெறுக்கவுமில்லை! ஆனால் அவர்களைப்போல் நாடும் மகிழவேண்டும், நாட்டு மக்களும் மகிழ வேண்டும்.

சென்ற பதின் மூன்று ஆண்டுகளாக இந்த விடுதலைவிழாவைக் கொண்டாடி வருகிறார்கள்.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி இந்தியத் துணைக் கண்டம் ஆங்கிலேயர்களின் கோரப்பிடியிலிருந்து விடுதலை பெற்றது.

வெள்ளைக்காரன் வெளியேறினன்-மகிழ்ச்சியடைகிறோம்!

அதிகார வெறி பிடித்து வந்த ஆங்கில ஏகாதிபத்தியம் துரத்தியடிக்கப்பட்டது-எத்தனை மகிழ்ச்சி, எத்தனை மகிழ்ச்சி, எங்களுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி.

மண்ணாசைப் பிடித்து அலைந்த அந்நிய ஏகாதிபத்தியம் விரட்டியடிக்கப்பட்டது-இதைவிட களிப்பு எங்களுக்கு வேறு என்ன இருக்கிறது?

இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்றது-இதைவிட பெருமை நமக்கென்ன வேண்டி இருக்கிறது.

ஆனால் கிடைத்த விடுதலை நமக்குக் கொடுத்த சுகமென்ன? பெற்ற சுதந்திரத்தால் நாம் பெற்ற பலன் தான் என்ன?

விழாக்கொண்டாடி மகிழும் அமைச்சர்கள் இதைப்பற்றியும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று தான் நடைபெற்றது போல் இருக்கிறது அந்த நிகழ்ச்சி. ஆனால் அந்த நிகழ்ச்சி நடைபெற்று ஆண்டுகள் பதின்மூன்று ஓடிவிட்டன என்பதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

விடுதலை பெற்ற இந்த பதின்மூன்று ஆண்டு காலத்தில் தமிழகத்திற்குக் கிடைத்த நன்மைகள் ஏதேனும் ஒன்றுண்டா? இருந்தால் சொல்லுங்கள் பார்க்கலாம்!

வளமிழந்து கிடந்த நாடு வளம் பெற்றதா? வறுமையால் வாடிக் கிடந்த மக்கள் வாழ்வு பெற்றனரா?

வெள்ளைக்காரன் காலத்திலும் தென்னகத்தில் தொழில் வளமில்லை-இன்றும் அந்தத் தொழில் வளமில்லை.

வெள்ளைக்காரன் காலத்திலும் இங்கு கனரகத் தொழிற்சாலைகள் இல்லை-இன்றும் அது இல்லை.

வெள்ளைக்காரன் காலத்திலும் இங்கு இரும்பாலைகள் இல்லை-இன்றும் அது இல்லை.

வெள்ளைக்காரன் காலத்திலும வறுமை இருந்தது-இன்றும் அந்த வறுமை இருக்கிறது!

வெள்ளைக்காரன் காலத்திலும் பஞ்சம், பசி இருந்தது. இன்றும் அந்த பஞ்சம், பசி இருக்கிறது. அதைவிட அதிகமாகவே இருக்கிறது,

வெள்ளைக்காரன் காலத்திலும் அடக்கு முறை தர்பார் இருந்தது-இன்றும் அந்த தர்பார் இருக்கிறது!

வெள்ளைககாரன் காலத்திலும் துப்பாக்கிகள் இருந்தன-இன்றும் அந்தத் துப்பாக்கிகள் அப்படியே இருக்கின்றன.

வெள்ளைக்காரன் காலத்தில் 144 உண்டு-இன்றும் அது உண்டு.

வெள்ளைக்காரன் காலத்தில் ஜாமீன்கள் உண்டு-இன்றும் அது உண்டு!

(11ம் பக்கம் பார்க்க)

இந்தியா என்றும் ஒன்றாக இல்லை! பாபுவே விளக்குகிறார் !

"இந்தியா ஒரு நாடல்ல—பல்வேறு கலாச்சாரங்களும், பல்வேறு பண்பாடுகளும், பல்வேறு மொழிகளும், பல்வேறு பழக்க வழக்கங்களும் கொண்ட பல்வேறு இன மக்கள் வாழும் ஒரு துணைக் கண்டம்" என்று எத்தனையோ முறை எடுத்துச்சொல்லியாகி விட்டது!

ஐரோப்பா கண்டத்தில்—இங்கிலாந்து இருப்பது போல், பிரான்ஸ் நாடு இருப்பது போல், ஜெர்மனி இருப்பது போல், ஸ்வீடன், நார்வே இருப்பது போல்—இந்தியத் துணைக் கண்டத்திலும் தென்னாடு இருக்கிறது, மராட்டியம் இருக்கிறது, வங்காளம் இருக்கிறது, பஞ்சாப் இருக்கிறது, பாக்கிஸ்தான் இருக்கிறது! என்பதை தெளிவாக விளக்கி தென்னகம் தனித்தியங்க வேண்டும் என்று கூறி வருகிறோம் அரசியல் குருடர்கள் இதை ஏற்க மறுக்கிறார்கள், இதைத் தான் பாபு ராஜேந்திர பிரசாத் மிகத் தெளிவாக விளக்கி இருக்கிறார்!

"இம்மாதிரி ஏக இந்தியா அமைப்பு இது காறும் இருந்ததில்லை. அசோக சக்கரவர்த்தி ஆண்ட காலத்திலும், முகலாய ஆட்சியிலும் கூட இந்தியா ஒரு குடையின் கீழ் இருந்ததில்லை" என்று நமது பெருமதிப்பிற்குரிய ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரசாத் கூறி இது ஒரு நாடல்ல என்பதை தெளிவாக விளக்கி இருக்கிறார்!

வெள்ளைக்காரன் காலத்தில் தான் இந்தியா ஒன்றாக இணைந்து, ஒரே ஆட்சியின் கீழ் வந்தது! அவன் மண்ணாசைப் பிடித்தவன், மற்றவர்களை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன்! வடவர்களும் அப்படியா? ஏன், தனித்தனி நாடாக இருந்த இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும்! உங்களுக்கும் மண்ணாசை இருக்கிறதா? ஏகாதிபத்திய வெறித் தன்மை இருக்கிறதா? காங்கிரஸ்காரர்கள் இதற்கு விளக்கம் தர வேண்டும்,



15

நீல நிற வானம், கருமேகக் கூட்டங்களால் இருண்டு கிடந்தது! அங்கொன்றும், இங்கொன்றுமாய் மேகக் கூட்டங்களை விலக்கி விட்டு நட்சத்திரங்கள் மின்னிச் சிரித்துக் கொண்டிருந்தன! மனித இனங்கள் மட்டுமல்ல, பறவை இனங்களின் சிறு முனகல் சத்தத்தைக் கூட கேட்ட முடியவில்லை!

அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த உலகத்தில் அந்த ரயில் வண்டி மட்டும் அலுக்காது பேயிரைச்சலோடு ஓடிக் கொண்டிருந்தது! நெடுவழிப் பயணம் அதற்குச் சற்று களைப்பைத் தந்தது போலும்! கடலூர் வந்தது, அந்த வண்டியும் நின்றது!

"இது...?"

"கடலூர், அம்மா!"

"இங்கே ரொம்ப நேரம் நிக்குமா?"

"இருபது நிமிடம் நிக்கும். ஏன்? உங்களுக்கு ஏதாவது வேணுமா?"

"இல்லை, இல்லை ஒண்ணும் வேண்டாம்" கொஞ்சம் கூச்சத்தோடு தான் கூறினாள்!

"கொஞ்சம் டீ வாங்கிகிட்டு வரட்டுமா?"

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம!"

"அப்படின்னா இந்த பையை கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கோ—நான் டீ சாப்பிட்டு விட்டு வர்றேன்!"

"ஓ, போயிட்டுவாங்க" என்பதை தலையை அசைத்து சைகைக் காட்டிச் சொன்னாள்!

அந்தப் பிரயாணியும் கீழே இறங்கி டீ சாப்பிட சென்றுவிட்டான்!

அவளோ சிந்தனையில் மூழ்கிக் கிடந்தாள்! எதையோ எண்ணி எண்ணி ஏங்குவது போல் அவளது முகம் வாடிக் கிடந்தது! திடீரென்று அவன் வைத்து விட்டுப் போன அந்த 'லெதர் பேக்கை' உற்று கவனிக்க ஆரம்பித்தாள்! அதில் செருகியிருந்த அந்தச் சீட்டை படிக்க முயன்றாள்! ஆனால் அந்தச் சிறிய எழுத்தை அவளால் அங்கிருந்து படிக்க முடியவில்லை! சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்து விட்டு அந்த பையை கையில் எடுத்தாள்! அதில் செருகி இருந்த அந்த முகவரிச் சீட்டை அவசர அவசரமாகப் படித்தாள் அந்த அவசரத்திலும் அவளது முகம் மலர ஆரம்பித்தது! உதடு புன்னகையைச் சிந்தத் தொடங்கிற்று!

அவன் அந்த வண்டியில் ஏறுவதற்கும் இவள் அந்தப் பையை இருந்த இடத்தில் வைப்பதற்கும் சரியாக இருந்தது! "எங்கே பார்த்து விடுவாரோ" என்ற சந்தேகத்தால் — "யாராவது வந்து உட்கார்ந்து விடுவாங்க என்பதற்காக உங்கள் லெதர் பேக்கை நகற்றி வைத்தேன்" என்றாள்! அவனோ "பரவாயில்லை, பரவாயில்லை" என்று கூறினான்!

வண்டியும் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு ஓட ஆரம்பித்தது! சிறிது நேரம் இருவரும் அமைதியாகவே இருந்தார்கள் ஆனால் இருவரும் ஒருவருக்கு ஒருவர் தெரியாமலேயே பார்த்துக் கொண்டிருந்தார்கள்!

"இங்கே யார் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது அவர் பேசினால் என்ன" என்று அவள் மனதுக்குள்ளேயே எண்ணிக் கொண்டாள்!

"பார்த்தால் படித்தவன் போல் இருக்கிறதே—கொஞ்சம் பேசினால் தான் என்ன, பொழுதாவது போகுமே" என்று அவனும் மனதுக்குள்ளேயே எண்ணிக் கொண்டான்!

யார் முதலில் பேசுவது! இருவருக்குமே புரியவில்லை! "அவளே தான் பேசட்டுமே" என்று அவனும், "அவர் தான் முதலில பேசட்டுமே" என்று இவளும் மனதிலேயே எண்ணி புழுங்கிய வண்ணம் இருந்தனர்!

என்ன இருந்தாலும் பெண்ணல்லவா அவள் எப்படி பேசுவாள்!

"நீங்கள் சென்னைக்குதான் போறீங்களா?" அவன் மெள்ள பேச ஆரம்பித்தான்!

"ஆமாம்" என்று அவள் பல்லிடுக்கோடு கூறினாள்!

ஒரு இரண்டு நிமிடம் வரையில் அமைதி தான் நிலவிற்று!

"நீங்கள்...?" என்று தொடங்கினான் அவன்!

"நானும் சென்னைக்கு தான்" என்றான் அவன்!

"சென்னை தான் உங்களுக்கு சொந்த ஊரா?" என்றாள் அவள்!

"இல்லை எனக்கு மாயவரம் உங்களுக்கு?" என்று எதிர் கேள்வியை விடுத்தாள்!

அவன் சிரித்துக் கொண்டே "இல்லை—எனக்கும் உங்கள் பக்கம் தான்" என்றான்!

"ஓ அப்படியா?" பெருமூச்சோடு சொன்னாள்!

"ஏதாவது உத்தியோகம் பார்க்கிறீங்களா?" என்றாள் அவள்!

"இல்லை" என்றான் அவன்!

"அப்படின்னா ஏதாவது வியாபாரமா?" அவள் சற்று இண்டலோடு தான் கேட்டாள்!

"அதெல்லாம் ஒண்ணுமில்லே! நான் ஒரு எழுத்தாளன், ஒரு பேச்சாளன், ஒரு அரசியல்வாதி!" என்று தன்னை அறிமுகம் செய்துக் கொண்டான்!

சிரித்துக் கொண்டே "ஓ" என்றாள் அவள்!

"என்ன சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டான் அவன்!

"சிரிக்கிறேனா? அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே!" என்றாள் அவள்!

கொஞ்ச நேரம் அமைதி நிலவ ஆரம்பித்தது! அவள் ஒரு நாவல் புத்தகத்தைப் எடுத்து படிக்கத் தொடங்கினாள்!

"என்ன புத்தகமது?" என்று கேட்டாள்!

"சற்குணாவின் சபதம்" என்று சொல்லிக் கொண்டே அந்தப் புத்தகத்தை அவளுடைய கையில் கொடுத்தான்! அறியாமலேயே இரு கரங்களும் ஒன்றோடு ஒன்று தீண்டிக் கொண்டன!

"ஆமாம், இது யார் எழுதியது?" அவள் இதைக் கேட்கும் போது உதட்டில் புன்னகை அரும்பி இருந்தது!

"எழுதியவர் பெயர் தான் அதிலேயே இருக்கிறதே" என்று வினயமாகச் சொன்னான் அவன்!

"இவரைத் தான்-யார்என்று கேட்டேன்!" அவள் அவனை விடவில்லை!

"மன்னிக்கவும்—நான் தான்!"

"அப்படியா! உங்கள் பெயர் தான் உதய சூரியனோ?"

"ஆமாம்"! என்றான் அவன்!

"ரொம்ப மகிழ்ச்சி! உங்கள் புத்தகங்களை நான் படித்திருக்கிறேன்—ஆனால் உங்களை நான் நேரில் பார்த்ததில்லை!" என்றாள் அவள்.

"உங்களுக்கு கதைகளை படிப்பதில் ரொம்ப பிரியமோ!" என்று அவள் உள்ளத்தை அறிய ஆரம்பித்தான்!

"ஏதோ பொழுது போக்கிற்கு படிப்பேன் அவ்வளவு தான்" என்று கேலியாகச் சொன்னாள்!

"உங்களுக்கு யாருடைய புத்தகங்கள் அதிகமாகப் பிடிக்கும்?" புகழுரை பெற அவன் ஆசைப்பட்டான் போலும்!

(11ம் பக்கம் பார்க்க

தி. மு. க.

தமிழ்நாட்டில் பெரியகட்சி அல்லவாம்!

ஜாக்கியோடு ஜதை போடுகிறார்

ஜோக்கர் சிவஞானம்!

தோட்டா இல்லாத துப்பாக்கி நம்மை சுட்டுப் பார்க்கிறது!

நீண்ட நெடுநாட்களுக்குப் பிறகு சில்லறைகளைப் பற்றி எழுத வேண்டிய நிலை பிறந்ததற்காக வருந்துகிறோம்! முதலில் தயவு செய்து எங்களை மன்னித்து விடவும்!

அறிஞர் அண்ணா அவர்களின் அறவுரைகளை, நமது பாடுபடும் தலைவர்களின் சொற்பொழிவுகளை வெளியிட்டு உங்களை மகிழ்விக்க வேண்டிய இந்த பொன்னான பக்கத்தில் அற்பக் குணம் படைத்த அரசியல் அலிகளைப்பற்றி எழுத வேண்டிய சந்தர்ப்பம் வாய்த்ததற்காக மிக்க வேதனை அடைகிறோம்! ஆண்டவர்களே! உங்களைத் தான் பணிந்து வேண்டுகிறோம்—தயவு செய்து எங்களை மன்னித்து விடுங்கள்!

மரத்தடி ம. பொ. சிவஞானத்தைப் பற்றி தமிழ் நாடு நன்கறியும் என்றே நினைக்கிறோம்!

கடற்கரை மணற் பரப்பிலே உட்கார்ந்து கொண்டு, திராவிட நாடு பத்திரிகைகளை ஓங்கி ஓங்கி படித்து மனப்பாடம் செய்து பேசக் கற்றுக் கொண்ட எழுதப் பழகிக் கொண்ட அந்த சிவஞானத்தை மிகச் சிலருக்குத் தான் தெரிந்திருக்க முடியும்!

காங்கிரஸ் கட்சியில் இருந்த காலத்தில் காமராஜருக்கு எடுபிடி வேலை செய்து பெட்டித் தூக்கித் திரிந்த சிவஞானத்தைப் பற்றி ஒரு சிலருக்குத் தான் தெரிந்திருக்கமுடியும்!

பதவிக்காக காங்கிரஸ் கட்சியில் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்த காரணத்தால் அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்ட சிவஞானத்தைப் பற்றி வெகு சிலருக்கு தான் தெரிந்திருக்க முடியும்!

விளம்பரம் பெற வேண்டும், மக்களிடம் அறிமுகமாக வேண்டும் என்பதற்காக சென்ற தடவை நடை பெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே கலந்து கொண்டு—"இந்தியை எதிர்த்து, அடக்குமுறைகளுக்கு ஆளாகி சிறைக்குச் சென்று வாடிடும் எலும்புக் கூடுகளில் இந்த சிவஞானத்தின் எலும்புக்கூடு தான் முதல் எலும்புக் கூடாக இருக்கும்" என்று அழகாகப் பேசி, கற்றவித்தையை பெற்ற தாயிடமே காட்டி உறுமிய சிவஞானத்தைப் பற்றி பலருக்குத் தெரிந்திருக்கலாம்!

தமிழ் முரசு பத்திரிகைக்கு ஆசிரியாக இருந்து அவர் அடித்த தடிட்டையும், அவர் காட்டிய வீரத்தையும், அவர் அடித்த நடலையையும் பற்றி சில பலருக்குத் தான் தெரிந்திருக்க முடியும்!

"ஆங்கிலேயர்கள் எப்படி அன்னியர்களோ அதே போல் தான் வடவர்களும் நமக்கு அன்னியர்கள்! ஆங்கில மொழி எப்படி அந்நிய மொழியோ அதே போல் தான் இந்தியும் நமக்கு அந்நிய மொழி" என்று தமிழ் முரசு ஏட்டிலே எழுதி தமிழ் பக்தி வேடம் போட்ட சிவஞானத்தைப் பற்றி சில பலருக்குத் தான் தெரிந்திருக்க முடியும்!

"தமிழகம் டெல்லி பிடியிலிருந்து விலகி—தனிக் கொடியோடு, தனிப் படையோடு தனி வணிக உரிமையோடு சுதந்திரமாக வாழ வேண்டும்! இன்று கிடைத்திருக்கிற சுதந்திரம் தமிழ் நாட்டிற்கு கிடைத்த சுதந்திரமல்ல—எஜமானர்கள் தான் மாறினார்கள்—நம் அடிமைத் தனம் ஒழியவில்லை" என்று அந்தத் தமிழ் முரசு ஏட்டிலே பக்கம் பக்கமாகத் தீட்டிய சிவஞானத்தைப் பற்றியும் ஒரு சிலருக்குத் தான் தெரிந்திருக்க முடியும்!

சிவஞானத்தைப் பற்றி ஆதியோடு அந்தமாக தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவர் நடத்திய தமிழ் முரசு ஏடுகளை வாங்கிப் படித்தால் போதும்!

அந்த ஏட்டிலே நாத்திகம் பேசினார், டெல்லியை சாடினார், இந்தியை ஒழிப்பேன் என்று முழங்கினார்! மக்களுடைய ஆதரவு அவருக்கு ஒரு துளியும் கிட்டவில்லை!

நாத்திகம் பேசியவர் ஆத்திகம் பேச ஆரம்பித்தார்—தனி நாடு கேட்டவர். தனிக் கொடி கேட்டவர், தனிப்படைக் கேட்டவர்—"எல்லாம் ஒன்று, பாரதமே மிக நன்று" என்று முழங்கினார்! போக்கிடமில்லாமல் கிடந்த பார்ப்பனர்களில் சிலர் அங்கே நுழைந்தனர்! இவரும் ஒரு தலைவரானார்!

பிறகு "நானே ராஜா" என்று ஊரெங்கும் முழங்க ஆரம்பித்தார்! இவரது கதையில் ஒரு பாதியைத்தான் சொன்னோம்—மீதியை தெரிந்து கொள்ள ஆசைப்பட்டால்—பழைய தமிழ் முரசு ஏடுகளை வாங்கிப் படியுங்கள்!

இப்படி வீடு வீடாக நுழைந்து அரசியலில் சோரம் போன இந்த சிவஞானம் தான் குடந்தையில் கொக்கரித்திருக்கிறார்!

"ஆதித்தனார் கறுப்புக் கொடி பிடிப்பதை அந்த வீராதி வீரர் ஆதரிக்கிறாராம்!

எதற்காகத் தெரியுமா டெல்லியில் உள்ளவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி தான அறிந்திருக்கிறார்களாம்! தமிழ் நாட்டில கறுப்புக் கொடி பிடிக்க தி.மு.க. ஒன்று தான் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்களாம்! அந்த எண்ணத்தைப் போக்க அந்த வீர சூரர் ஆதித்தனார் சவால விட்டிருக்கிறாராம்! அதற்காக இருவரும் ஆதரிக்கிறாராம்!

எப்படி இருக்கிறது நண்பரின் அரசியல்!

கறுப்புக் கொடி. யார் பிடித்தாலும் கொள்கை யளவில் அதை ஆதரிக்க மாட்டாராம்! ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக பிடிப்பதால் இதை ஆதரிக்கிறாராம்!

என்னே அரசியல் ஞானம், என்னே அரசியல் ஞானம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை அடக்கினால் மட்டும் போதாதாம்! திராவிடமுன்னேற்றக் கழகம் ஒன்றும் பெரிய கட்சியும் அல்லவாம்! அதை விடப் பல பெரிய கட்சிகளும் இங்கு உண்டாம்! இதை ஆதித்தனார் எடுத்துக் காட்ட முன்வந்து விட்டாராம்!

பக்கத்து வீட்டுக்காரியின் கணவன் அழகன். ஆண்மகன், வீரன் என்பதற்காக, எதிர் வீட்டுக் கணவனை அழைத்து—'பார்! பார்! உன் கணவன் தானா பெரிய அழகன், உன் கணவன் தானா பெரிய வீரன், உன் கணவன் தானா பெரிய ஆண்மகன்—இந்த ஆளைப்பார், அவன் அழகைப்பார், அவன் உடலிலே இருக்கிற மினு மினுப்பைப்பார்" என்று வருணித்தாளாம் நொண்டிக் கணவனைப் பெற்ற ஒரு குருடி! "உன் கணவன் சங்கதி என்ன?' என்று கேட்டாளாம் அந்த வாயாடி! "என் கணவன் நொண்டி என்றால் என்ன—எதிர்த்த வீட்டுக் கணவனுக்கு எவ்வளவு ஆண்மை இருக்கிறது தெரியுமா?" என்றாளாம் அந்த குருடி!

அதே போல், திராவிட முன்னேற்றக் கழகம் பெரிய கட்சி அல்ல என்பதை எடுத்துக் காட்ட எதிர்த்த வீட்டு ஆதித்தனாரைத் தேடிப் பிடிக்கிறாரே தவிர—தன் தமிழரசுக் கழகத்தைக் காட்டவில்லை! ஏன் உனக்குக் கிடைத்த கணவன் நொண்டியா? அதற்காக எதிர்த்த வீட்டுக் கணவனை ஆதரிக்க வேண்டுமா?

சிலம்புச் சிங்கமே! தமிழின் த(ப)ங்கமே!

எங்கே உன் படைகள்? ஏன் கறுப்புக் கொடி பிடிக்கவில்லை?

ஓட்டை வாயன் ஊதும் சங்கு! கையில்லாதவன் கொட்டும் முரசு!

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் பெரிய கட்சி அல்ல என்பதை விளக்கிட ஆதித்தனுடைய கட்சி தானா கிடைத்தது? ஏன் உன் கட்சி என்ன வாயிற்று? உன்னுடைய கட்சிக்கு கட்டளையிட்டு கறுப்புக் கொடி பிடிக்கச் சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தை சிறிய கட்சியாக்கிக் காட்டுவது தானே? அதற்கு வக்கில்லையா? வழியில்லையா? துப்பு இல்லையா? திறமையில்லையா? வீரமில்லையா?

“ஐயோ தேனா, ஐயோ தேனா” என்றாளாம் ஒருத்தி— எடு விளக்கு மாற்றை, கூப்பிடு எதிர்த்த வீட்டு ஆண் பிள்ளையை என்றானாம் ஒருவன்!

அப்படி என்ன நீ ஆண் பிள்ளை இல்லையா? ஆதித்தனார் தானா கறுப்புக் கொடிக் காட்ட வேண்டும்!

வெட்கமில்லை, ரோஷமில்லை எதிர்த்த வீட்டுக் கணவனைக் காட்டி பக்கத்து வீட்டுக் கணவனைப் பழிக்க உனக்கு மானமில்லை? காட்டினால் உன் கணவனைக் காட்டு! இல்லா விட்டால் தொண்டியோடு காலத்தை கடத்து—எதிர்த்த வீட்டுக் கணவனை அழைக்காதே! அது தமிழ் பண்பிற்கு இழுக்கு, தமிழ் நாகரீகத்திற்கும் மாசு!

“வா! தமிழகம் முழுவதும் பரவிக் கிடக்கும் படைகளைத் திரட்டு! பாபு ராஜேந்திர பிரசாத்திற்கெதிராகக் கறுப்புக் கொடியை பிடிக்கச் சொல்லு! “பார்! பார்! திராவிட முன்னேற்றக் கழகத்தால் மட்டும் தானா கறுப்புக் கொடி பிடிக்க முடியும்! என்னாலும் பிடிக்க முடியும், என்னாலும் எதையும் செய்ய முடியும்” என்பதை எடுத்துக் காட்டி புகழாரம் சூட்டிக் கொள்! உன்னைத் தடுக்கவில்லை! ஏன் என்று கேட்கவில்லை! ஆனால் நீ ஆதித்தனாரைக் காட்டி வீரம் பேசுவது ஆண்மையைக் குறிக்காது, இது பேடிகளுக்கு மட்டுமே ஏற்றதாகும்!

ஆதித்தனார் கறுப்புக் கொடி பிடிப்பது தமிழகத்தின் தனிப்பெரும் சக்தியாக இருக்குதாம்! அதைவிட உன்னுடைய வீட்டு பூசாரியை கொடி பிடிக்கச் சொல்லி—“பார்! பார்! எங்கள் பெரும் சக்தியைப் பார்” என்று சொல்லி தொங்கிக் கிடக்கும் மீசையை சற்று நேரமாவது தூக்கி வைத்திருக்கலாமே! இதை விட்டு விட்டு எதற்காக ஆதித்தனாருக்குத் தூபம் போட வேண்டும்! அல்லது பாராட்டச் சொல்லி ஏதாவது பரிசுகளை அள்ளி வழங்கினாரா?

அப்படி ஒன்றும் அவர் இளித்தவாயருமல்லவே! “நாம் தமிழரி”ன் பெயரால் அவர் போட்ட நாமம் இன்னும் பலருடைய நெற்றியிலிருந்து அழியவுமில்லையே!

தேர்தல் வருகிறது—என்ன திருகூத்து நடந்திருக்குமோ? யார் அறிவார்கள்!

கோமாளிகளைக் கண்டு எவனும் பயப்பட மாட்டான்! கோமாளியை வைத்துக் கொண்டு கொஞ்ச நேரமாவது சிரித்து பொழுதைப் போக்கிக் கொள்ளலாம்!

சீட்டாடும் நண்பர்களுக்கு ஜோக்கரைப் பற்றி நன்கு தெரிந்திருக்கும்! ஜோக்கர் சீட்டுக்குத் தனியாக மதிப்பு ஏதுமில்லை! அதை எந்த சீட்டோடு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்!

விளையாட்டுச் சீட்டில் மட்டும் ஜோக்கரில்லை--அரசியலிலும் உண்டு என்பதை நமது சிவஞானம் காலம் வாய்க்கும்போதெல்லாம் எடுத்துக் காட்டிக் கொண்டே வந்திருக்கிறார்!

இந்த அரசியல் ஜோக்கர் சிவஞானம் தான் நமக்கு சவால் விடுகிறது! ஜாக்கியோடு ஜதை போட வரும் ஜோக்கரைப் பற்றி உலகம் என்ன நினைக்கும்? என்ன நினைக்குமா? எள்ளி நகையாடும்!

நண்பர் சிவஞானமே! துள்ள வேண்டாம்! நீர் யார் என்பதை யாம் அறிவோம்!

உன்னுடைய பேச்சால் உலகமே திரண்டு வந்துவிடாது!

நீயோ ஒரு ஓட்டை வாயன், ஏன் சங்கெடுத்து முழங்குகிறாய்? அதனால் உனக்கு என்ன பலன் கிடைக்கப் போகிறது!

உனக்கோ இரு கைகளில்லை! ஏன் முரசறையக் கிளம்புகிறாய்!

நீயோ ஒரு தோட்டா இல்லாத துப்பாக்கி, வெறும் வேடிக்கைத் துப்பாக்கி! ஏன் வீணே வேட்டு சப்தத்தைக் கிளப்புகிறாய்?

காலம் மாறி வருகிறது! உன் போக்கை மாற்றிக் கொள்! இல்லையேல் காலப் பெருவெள்ளத்தில் மூழ்கிக் கலங்க நேரிடும்!

இதைவிட உனக்கு எச்சரிக்கை செய்து உன்னைக்காப்பாற்ற வேறு ஆள் கிடைக்காது! தயவு செய்து எங்கள் நல்லுரையை செவி மடுக்க வேண்டுகிறோம்! “முடியாது, முடியாது” என்று முழங்கினால் மூக்குடைபடும், அரசியலிலே மூக்குடைபடும்!

★

(2ம் பக்கத் தொடர்ச்சி)

எப்போதண்ணா நாங்கள் கோழைகளாக இருந்தோம்! மும்முனைப் போராட்டக் காலத்தில் உதைபட வில்லையா? அடிபட வில்லையா? குண்டுகளை ஏற்கவில்லையா? எங்கள் மண்டையில் ரத்தம் கசியவில்லையா? எத்தனையோ உத்தமர்கள் தங்கள் உயிரை இழந்தார்களே! எத்தனையோ உத்தமர்கள் தங்கள் கரங்களை இழந்தார்களே! கண்களைப் பறி கொடுத்தார்களே! கருணாநிதி தண்டவாளத்தில் படுத்தாரே—ஆறுமாதக் கடுங்காவலைப் பெற்றாரே!

நீங்களும், நாவலரும், சம்பத்தும் மதியழகனும், நடராசனும்—இன்னும் பெரும் பெரும் தலைவர்களும் சிறையில் வாடினீர்களே! இதைக் கூடவா இந்த வஞ்சகர்கள் புரிந்து கொள்ளவில்லை.

“தம்பி! ஒரு நாள் ரயிலை நிறுத்து! இந்தக் கோழைகளின் கொக்கரிப்பைப் பார்ப்போம்—”

“தம்பி! மீண்டும் கறுப்புக் கொடியை எடு—இந்த கொடும் நெஞ்சர்களுக்கு பாடம் கற்பித்து வா”—

இப்படி ஒரே ஒரு கட்டளையிடுங்கள் அண்ணா!—நாங்கள் வீரர்களா அல்லது கோழைகள் தானா என்பதைக் காட்டி விட்டு வருகிறோம்!

எதிரிகளின் ஏசலைக் கண்டு இலட்சக் கணக்கான இளைஞர்கள் இப்படித் துடி துடிக்கிறார்கள்! ஆனால் அண்ணாவிடம் செல்ல அஞ்சுகிறார்கள்! எப்படிக் கேட்பது என்று பயப்படுகிறார்கள்

கொதிக்கும் உள்ளத்தோடு வாசற்படி அருகே செல்லுகிறார்கள்—“அண்ணா என்ன சொல்லுவாரோ” என்று நடுங்கித் திரும்புகிறார்கள்!

வெடிக்கும் நெஞ்சத்தோடு வீட்டிற்குள்ளே நுழைகிறார்கள்—அண்ணாவைப் பார்த்ததும் வெல வெலத்துத் திரும்புகிறார்கள்!

இப்படிப்பட்டத் தலைவரை நாங்கள் பெற்றிருப்பதால் தான் நீங்கள் துடிக்கிறீர்கள். துள்ளுகிறீர்கள்!

திட்டினால், நாங்கள் துடித்துக் கிளம்புவோம்—தூற்றினால் நாங்கள் கொதித்தெழுவோம்! நாங்கள் கொதித்தெழுந்தால் நாடும் கொந்தளிக்கும்—நாடு கொந்தளித்தால் நாச வேலைகள் நடக்கும் நாச வேலைகள் நடந்தால் அதைப் பார்த்து பார்த்து மகிழலாம். அதைக் காட்டி லாபம் பெறலாம் என்று எண்ணுகிறார்கள்! குட்டையைக் குழப்பி, அதிலே கிடைக்கும் மீன்களை பிடித்து ரசித்து ரசித்து, ருசித்து, ருசித்து—தின்று ஊனை வளர்க்கலாம் என்று கருதுகிறீர்கள் அது ஒரு நாளும் நடவாது. எங்கள் அண்ணா இருக்கிற வரையில் நிச்சயமாக நடவாது!

நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் கூறியது போல் நாங்கள் தமிழ் மக்களின் அறிவுக்கே சான்றாக இருப்பவர்கள், அவர்களின் பண்பாட்டிற்கே உதாரணமாக இருப்பவர்கள்!

பெரியவர்கள் தந்த வாக்குறுதி மீறப்பட்டால் மீண்டும் கறுப்புக் கொடி. அவர்கள் தந்த வாக்குறுதி காப்பாற்றப்பட்டால் நாட்டிலே அமைதி· இது தான் எங்கள் முடிவு!

வீதியிலே திரியும் வீரர்களின் சலசலப்புக்கு எங்கள் கண்ணியத்தை ஒரு நாளும் பலி கொடுக்க மாட்டோம்!

நமது வெற்றியைக் கண்டு

'அரசியல் அபலைகள்' அலறுகின்றனர்!

அந்த அற்பர்கள் மிரளும்படி கழகத்தை வலுப்படுத்துங்கள் !

(சம்பத் பேச்சு)

(5ம் பக்கத் தொடர்ச்சி)

படி நான் டில்லிக்குச் சென்றேன். அங்கு நான் நிதியமைச்சர் பேச்சுக்களைப் பார்த்தேன்.

பல பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னிடம் சுப்பிரமணியத்தின் பேச்சைக் காட்டி, அவர் இறங்கி பேசியதைச் சுட்டிக் காட்டினார்கள்.

நான் அவர்களிடம் கூறினேன். இப்போது பேசியிருப்பது "பழைய சுப்பிரமணியமல்ல, புது சுப்பிரமணியம்" என்றேன்.

நிதியமைச்சர் பேச்சில் பணிவும், கனிவும் தென்பட்டது. வரிக்கு வரி கனிவு மொழிகள் தொனித்துக் கொண்டிருந்தன.

சட்டசபையில் நம்மிடம் அலட்சியமாகப் பேசும் சுப்பிரமணியமா இப்படிப் பேசியிருக்கிறார் என்று எண்ணினேன்.

நாம் கோடம்பாக்கத்தில் எடுத்த முடிவு இவ்வளவு தூரத்திற்கு அவர்களைக் கீழிறங்கச் செய்திருக்கிறது.

குடியரசுத் தலைவரும் ஐதராபாத்தில் பேசிய ஒரு பேச்சில் ஒருவாறு நமது கோரிக்கையை மதித்து, அதற்கான உறுதியளித்துப் பேசி இருக்கிறார்.

இருந்தாலும், இவையெல்லாம் எனக்கு சமாதானம் கொடுக்கவில்லை. டில்லியிலுள்ள ஏகாதிபத்திய வெறியர்கள், ஆணவம் மிக்க தருக்கர்கள் சரியானபடி நடந்து கொள்வார்களா என்ற அச்சம் பிறந்தது.

நான் உடனே நமது அண்ணா அவர்களைக் கலந்து பிரதமர் நேருவுக்கு 3-8-60ம் தேதி ஒரு கடிதம் எழுதினேன். அதில் நமது கோரிக்கையைப் பற்றித் தெளிவாக விளக்கி, தென்னக மக்களின் கொதிப்பை தெளிவுபடுத்தி, கோடம்பாக்கம் முடிவையும், அந்த நமது அண்ணா அவர்கள் பேசிய பேச்சையும் குறிப்பிட்டு எழுதியதுடன், நாங்கள் குடியரசுத் தலைவரை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த முடிவுக்கு வரவில்லை. எங்கள் உள்ளக் கருத்தை அறிவிக்கவே செய்ய போகிறோம். நாங்கள் குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக் கொடி காட்டும் போது திரும்பிப் போங்கள் என்று சொல்ல மாட்டோம், "இந்தி ஒழிக! தமிழ் வாழ்க" என்று தான் முழக்கமிடுவோம். இதை எங்கள் தலைவர் அவர்கள் பேச்சில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே நீங்கள் பாராளுமன்றத்தில் இந்தியைப் பற்றி கொடுத்த வாக்குறுதியை உறுதிப் படுத்தும் வகையில் உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள். நான் இன்றிரவு சென்னை செல்கிறேன். அதற்கு முன் தங்கள் கடிதம் கிடைத்தால் நலமாக இருக்கும் என்று எழுதியிருந்தேன்.

நான் அந்தக் கடிதத்தை நேருவின் செயலாளர் திரு. கண்ணா அவர்களிடம் கொடுத்தது, எனக்கு இதற்கு உடனே பதில் வேண்டும், நான் இன்றே சென்னைக்கு செல்கிறேன் என்று கூறினேன். அவர் நீங்கள் பிரதமரைப் பார்க்க விரும்புகிறீர்களா என்று கேட்டார். எனக்கு கடிதத்திற்கு விளக்கம் தந்தால் போதுமென்று கூறினேன்.

எனக்குக் கடிதம் கொடுத்த நான்கு மணிநேரத்தில் என் வீட்டிற்குப் பதில் வந்தது அந்தக் கடிதம் வரும் போது நமது நண்பர் தர்மலிங்கமுமிருந்தார். கடிதத்தைப் பார்த்ததும் எனக்குச் சமாதானம் ஏற்படவில்லை. இருப்பினும் மௌனம் சாதித்தவர்கள் இப்படி இறங்கி வந்திருக்கிறார்களென்று எண்ணினேன்.

வானொலியில் மாலையில் 7-15 மணிக்கு கூறப்பட்ட தமிழ் செய்தியில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டது முன்னேற்றக் கழகத்திற்கு மிக மரியாதை காட்டப்பட்டது. இந்த அளவு வெற்றி எப்படி கிடைத்தது.

இதை நாம் முழு வெற்றி என்று கருதவில்லை. ஆனால் நாம் கோரியிருந்த கோரிக்கைக்கு உறுதி கிடைத்து விட்டது.

நம்மை அலட்சியப்படுத்தி, நம்மைத் துச்சமென மதித்து நம்மை இழிவாக எண்ணி வந்தவர்கள், நம்மையும், நமது நாட்டையும், நமது மக்களையும், நமது மொழியையும் அழிக்க எண்ணியவர்கள் இன்று நமக்கு மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் இது எதனால் ஏற்பட்டது.

நம்முடைய கோடம்பாக்க முடிவால் பல நிகழ்ச்சிகள் வேகமாக ஓடிக் கொண்டு போயிற்று நாட்டிலுள்ள மக்களெல்லாம் பரபரப்படைந்து விட்டார்கள்.

நான் டில்லியிலுள்ள ஏகாதிபத்திய வெறியர்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சியால் எங்களது இந்தி எதிர்ப்பு முடிந்து விடவில்லை. அதை ஒழிக்கும் போராட்டம் நடத்தியே தீருவோம்.

இந்தி மொழி வெறி பிடித்து இந்தியை அரியாசனத்தில் ஏற்ற முயற்சி செய்து வந்த டில்லி ஏகாதிபத்தியத்தின் தலைவர்களா... ஆணவமிக்க அந்த தருக்கர்களிடமிருந்து நாம் கோரியிருந்த கோரிக்கைக்கு சமாதானமான பதில் வந்திருக்கிறது!

அதை வைத்தே நாம் கறுப்புக் கொடி காட்டுவதை நிறுத்தி விட்டோம். இந்த அரசியல் நாகரிகத்தை—அரசியல் கண்ணியத்தை புரிந்து கொள்ளாத அரசியல் அபலைகள் நம்மை கேலியும் கிண்டலும் செய்து வருகிறார்கள்.

நம்முடைய செயற்குழு கூடி நமக்கு ஒருவகையான வெற்றி கிடைத்திருக்கிறது என்பதை எண்ணியே கறுப்புக் கொடி நிகழ்ச்சியை கைவிட்டிருக்கிறது

நான் மிகவும் உறுதியான முறையில் டில்லியிலுள்ள அதிகார வெறியர்களுக்குக் கூற ஆசைப்படுகிறேன். எங்கள் போர் கொடி இன்னும் பறந்து கொண்டு தான் இருக்கிறது. அதை இறக்கவில்லை. நமக்கு வாக்குறுதி தந்திருக்கிற பெரிய மனிதர்கள் அதன்படி நடந்து கொள்ள வேண்டும். இந்தியை மறைமுகமாகப் புகுத்தச் செய்யும் காரியங்களையும் நீக்க வேண்டும்.

அரசாங்க அலுவலகங்களில் இந்தியைக் கற்க வேண்டுமென்று செய்து வரப்படும் செய்கைகளைப் போக்கிக் கொள்ளவேண்டும். இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தி இந்தியை பேசாத—விரும்பாத மக்களுக்கு ஒரு நம்பிக்கை வரும்படியான காரியத்தை உடனடியாகச் செய்ய வேண்டும் அப்போது தான் தென்னகத்தில் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சி நீங்கும், போர் குணமும் மாறும். இதை மத்திய அரசினரும், டில்லிக்குக் வால் பிடித்துக் கொண்டிருக்கும் மாநில அரசினரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்று நெருக்கடியை சமாளித்து விட்டதாக எண்ணிக் கொண்டிருந்தால் ஏமாற்றமடைவார்கள். மத்திய சர்க்கார் அலுவலக ஊழியர்கள் இந்தி கற்றுக் கொள்ள வேண்டுமென்று விடுத்திருக்கும் அறிக்கையை இந்த மாநில அரசினரும் தங்கள் அரசியல் பணிபுரியும் ஊழியர்களுக்கும் இலாகா அதிகாரிகள் மூலம் அனுப்பி இருப்பதாகத் தெரிகிறது "அறிந்து கொள்வதற்காகவும், அவசிய நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்காகவும்" என்று குறிப்பு எழுதி இருக்கிறது. ஏன் இங்குள்ளவர்களுக்கு இந்த தாசர் புத்தி.

இங்குள்ள ஆட்சியாளர்கள் தங்களது அடிமைப் புத்தியை விட்டு விட்டு நாட்டுப் பற்றோடும் மக்கள் நலனுக்காகவும் பாடுபட முன் வர வேண்டும்!

நண்பர் ஆசைத்தம்பி "இந்த வெற்றி நமக்கு மட்டுமல்ல இந்தி பேசாத விரும்பாத மக்களின் வெற்றியுமாகுமென்றார். நாம் செய்யும் காரியங்களில் இந்தி பேசாத மாநில மக்கள் ஒன்று பட்டு நமக்கு ஆதரவு தந்தால் இனி நாம் மேற்கொள்ளப் போகும் காரியங்களில் இதைவிட பலமான வெற்றி கிடைக்கும்.

இது வெற்றியா என்று பிதற்றும் பேதைகளுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன்.

கோவிந்தன், முருகனிடம் கடனாகப் பணம் வாங்கி யிருந்தான். அதைத் திருப்பிக் கொடுக்காது பல நாட்களாகத் தவணை சொல்லி வந்தான் கோவிந்தன் பலமுறை வற்புறுத்திக் கேட்டு வந்தான். ஒருதடவை கடுமையாகக் கேட்கும் போது முருகன் "பார்க்கலாம்" என்று இழுத்துச் சொன்னான் கோவிந்தனுக்குச் சந்தேகம் வந்து விட்டது பணத்திற்கே மோசம் வந்து விடுமோ என்றஞ்சி, பலாத்கார முறையில் பணம் கொடுக்க முடியுமா, முடியாதா என்று கேட்டான் முருகன் இதுவரை அலட்சியமாகக் கூறியவன் பணிவான முறையில் "பணம் இல்லையென்று யார் கூறியது" நான் கொடுத்து விடுகிறேன் என்று கூறினான் (இந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டு பிராமிசரி நோட்டு எழுதி கொடுத்தான் என்றார். இதை திரு சம்பத்தவர்கள் மக்களிடம் கூறினார்) வெறும் வாய

(12-ம் பக்கம் பார்க்க)

கவர்னர் பேருரையில்

நாட்டின் நல்வாழ்வைப்பற்றி ஏதுமில்லை !

கறுப்புக் கொடி நிறுத்தப்பட்டதை அவர் பாராட்டாத காரணமென்ன ?

இங்குள்ள ஆட்சியாளர்கள் நல்லவர்கள் – வடவரோடு போராடும் வல்லவர்கள் அல்ல !

சட்டமன்றத்தில் கலைஞர் கருணாநிதி முழக்கம் !

சென்னை சட்ட மன்றத்தில் நடைபெற்ற கவர்னர் உரையின் மீது நடந்த விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவரும் சட்ட மன்ற உறுப்பினருமான கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரையின் சாரம் வருமாறு:–

இந்த மன்றத்தில் கவர்னர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற வகையில் ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் அவரை மிகவும் பாராட்டிப் பேசினார்கள். எதிர்கட்சியைச் சேர்ந்த நாங்கள் கவர்னரின் உரையில் இருக்கின்றகுறைபாடுகளை கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்!

கவர்னரின் உரையில், இந்த மாநிலத்தில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கு நல்வாழ் வளிக்கின்ற திட்டங்களோ, வகைகளோ இல்லை என்பதை சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை வருத்தத்தோடு கூற வேண்டியவனாகிறேன்.

நாங்கள் இங்கே கூறுகின்ற குறைபாடுகளை, கவர்னரின் உரையை எதிர்க்கிறோம் என்ற மாறுபட்ட கருத்தில் காணாமல் நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்களை நல்லெண்ணத்தோடு கவனித்து ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

சமீபத்தில் நடைபெற்ற மத்திய அரசின் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் போது ஈடுபட்ட ஊழியர்களை பழிவாங்கும் முறையில் ஈடுபடாது அவர்களுக்கு நல்வாழ்வளித்து, அவர்கள் மறுமலர்ச்சியோடு வாழ்வதற்கான வழி முறையினை அரசினர் செய்ய முற்பட வேண்டும்.

கவர்னர் ஆற்றிய உரையில் மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை சமாளிப்பதற்காக காவல் துறையினரும், பொது மக்களும் ஒத்துழைப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்திருக்கிறார். ஆனால், இந்த மாநிலத்தில் மொழிப் பிரச்சினைக்காக இந்திய குடியரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத்தும், பிரதமர் நேருவும், அமைச்சர் கோவிந்த வல்லப பந்துவும் கொடுத்த வாக்குறுதியின் மீது கறுப்புக் கொடி நிகழ்ச்சியினை கைவிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை பாராட்டவில்லை.

அப்படிப் பாராட்டி இருந்தால் நாங்களெல்லாம் பூரித்திருப்போம்.

இங்கு பேசிய எங்கள் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் காவல் துறையில் உள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கும் நேரத்திலும், கோயில்களில் வழிபாட்டின் போதும் இந்தி புகுத்தப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டினார்கள்

தமிழகத்தில் பவனி வந்து கொண்டிருக்கிற இந்திய குடியரசுத் தலைவர் நமக்கு இந்தியை பலவந்தமாக புகுத்த மாட்டோம் என வாக்குறுதி அளித்துள்ளார். ஆனால் சட்டமன்றத்தின் மூலம் அவருக்கு அளிக்கப்படும் வரவேற்பிற்கு அழைக்கப்படுகின்ற அழைப்பிதழில ஒரு பக்கத்தில் ஆங்கிலமும், மறு பக்கத்தில் இந்தியுமாக அச்சடிக்கப்பட்டுள்ளது.

இந்த மன்றத்தில் ஒரு சமயம் அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சியை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களால் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு தமிழிலே பதிலளித்தால் தான், துணைக் கேள்விகள் கேட்பதற்கு அனுசரணையாக இருக்கும் என்று சொல்லப்பட்டது.

ஆனால் சட்ட மன்றத்தின் மூலம் குடியரசுத் தலைவரின் வரவேற்புக்கு அனுப்பப்படும் அழைப்பிதழில் ஆங்கிலமும் இந்தியும் இடம் பெற்றிருப்பதைப் பார்த்து புரிந்து கொள்ள முடியுமா? புரிந்து கொள்வதற்காக எவரிடம் காட்டுவது? மற்ற

(12-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாளர்கள் கவனிக்கவும்

மாலைமணி விற்பனையாளர்களில் வெகுபலர், வாரா வாரம் “ அதிக இதழ்கள் வேண்டும், அதிக இதழ்கள் வேண்டும் ” என்று எழுதிக் கொண்டே வருகின்றனர் !

ஆரம்பத்தில் ஒரு பத்து, இருபது இதழ்களுக்கு முன் பணம் கட்டியவர்களெல்லாம் “ நூறு, இருநூறு ” வேண்டுமென்று கேட்கின்றனர் ! ‘ இது கவனிக்கப்படுவதில்லை ” என்றும் சிலர் வருந்தப்படுகின்றனர்.

“ மாலைமணி ”யின் விற்பனையைப் பெருக்கி வரும் நண்பர்களுக்கு எங்களது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் !

அதிக இதழ் வேண்டுவோர் அதற்குரிய முன் பணத் தொகையையும் அனுப்பித்தர வேண்டுகிறோம் ! முன் பணம் இன்றி வரும் கடிதங்கள் நிச்சயமாகக் கவனிக்கப் படமாட்டது.

சில விற்பனையாளர்கள் பில் தொகையை சரிவர கட்ட ஏற்பாடு செய்வதில்லை ! பில் கிடைத்த 4 தினங்களில் பில் தொகையை அனுப்பித் தர வேண்டும் ! அப்படி அனுப்பித் தராத விற்பனையாளர்களுக்கு எந்தவிதமான முன்னறிவுப்பும் இல்லாமல் இதழ்கள் அனுப்புவது நிறுத்தப்படும் !

தயவு செய்து விற்பனையாளர்கள் எங்களோடு ஒத்துழைக்க வேண்டுகிறோம் !

நிர்வாகி,

மாலைமணி

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளைக்காரன் காலத்தி சென்னைக்குத் தமிழ் நாடு என்று பெயரில்லை—இன்றும் அந்த பெயரில்லை!

வெள்ளைக்காரன் காலத்திலும் தமிழ் ஆட்சி மொழியாக இல்லை—இன்றும் தமிழ் ஆட்சி மொழியாக இல்லை.

வெள்ளைக்காரன் காலத்திலும் தமிழ் நாட்டில் தமிழகத்தின் தலைநகர் இல்லை—இன்றும் தமிழகத்தின் தலைநகர் தமிழகத்தில் இல்லை!

இதை எப்படி நாம் சுதந்திர நாடு என்று கூற முடியும்?

இதை எப்படி நாம் விடுதலைப் பெற்ற நாடு என்று கூற முடியும்?

முன்பெல்லாம் அடிக்கடி சிவஞானம் கூறுவாரே அதைப் போல் வந்த விடுதலை விந்தியத்திற்கு அப்பாலேயே நின்றுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்!

வெள்ளைக்காரன் காலத்தில் இல்லாத தொழிற் சாலைகள் பல, வடக்கே இன்றுண்டு.

வெள்ளைக்காரன் காலத்தில் வடக்கே பிலாய் இல்லை—இன்று பிலாய் உண்டு.

வெள்ளைக்காரன் காலத்தில் "பக்ரா நங்கல்" இல்லை—இன்று அங்கே பக்ராநங்கல் இருக்கிறது!

வெள்ளைக்காரன் காலத்தில் துர்க்காபூர் தொழிற்சாலை இல்லை இன்று உண்டு!

வெள்ளைக்காரன் காலத்தில் கனரகத் தொழிற்சாலைகள் இல்லை—இன்று உண்டு.

வெள்ளைக்காரன் காலத்தில் பெரும் பெரும் அணைகள் இல்லை இன்று அணைகள் அங்கே ஏராளம்!

கிடைத்த சுதந்திரம் வடவர்களுக்கா? நமக்கா? ஆத்திரம் கொள்ளாமல் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம்!

ஆட்கள் மாறிவிட்ட காரணத்தால் விடுதலை கிடைத்து விட்டது என்று பொருளா?

ஆங்கில மொழி பேசும் சர்ச்சில் துரைக்கு பதில், இந்தி மொழி பேசும் நேரு துரை ஆட்சி பீடம் ஏறிவிட்ட காரணத்தால தமிழனுடைய அடிமைத் தளை நீங்கிவிட்டதா?

நீங்காது, நீங்கவுமில்லை.

தென்னகத்தில் வாழும் காங்கிரஸ் நண்பர்கள் இதை உணர வேண்டும்.

சுதந்திரப் போரில் மிகப்பெரிய தியாகங்களைச் செய்து நாட்டை மீட்டிடும் பணியில் பெரும் பங்கேற்று உழைத்திட்ட வங்கம் இன்று துக்க நாள் கொண்டாடுகிறது! வங்கம் தந்த காங்கிரஸ் வீரர்களுக்குமட்டும் இந்த இனப் பற்று எப்படி வந்தது—ஏக பாரத வெறி ஏன் மறைந்தது?

தமிழ் நாட்டு அமைச்சர்களும், காங்கிரஸ் நண்பர்களும் உணர வேண்டும்.

தமிழ் இனம் தனி இனம், தமிழ் இனம் தனி நாகரீகம் கொண்ட இனம், தமிழ் இனம் தனிப் பண்பாடு கொண்ட இனம். இதை முதலில் உணர்ந்து பணிபுரிய வேண்டும்.

பாபு ராஜேந்திரபிரசாத் சுதந்திர தின விழாவில் பேசுகையில்—'இம் மாதிரி ஏக இந்தியா அமைப்பு என்றுமே இருந்ததில்லை. அசோகச் சக்ரவர்த்தி ஆண்ட காலத்திலும், முகலாயர் ஆட்சியிலும் கூட நாடு முழுதும் ஒரு குடையின் கீழ் இருந்ததில்லை" என்று குறிப்பிட்டிருப்பதை உணர்ந்து தென்னகம் விடுதலை பெற பாடுபட வேண்டும்.

அந்த உணர்ச்சி என்று வளர்கிறதோ, அந்த உணர்ச்சியால் என்று தென்னகம் விடுதலை பெறுகிறதோ அன்று தான் நமக்கு சுதந்திர திருநாள், விடுதலைப் பெரு நாள்.

ஆகஸ்டு 15 புதிய எஜமானர்களைத் தந்த நாள்—பழைய அடிமை ஒழிந்து, நாம் புது அடிமையை மேற் கொண்ட நாள்.

பழைய அடிமைத்தனம் ஒழிந்த தற்காக மகிழ்ச்சி. புது அடிமையை ஒழிக்க பொங்கி எழும் எழுச்சியோடு புறப்படுங்கள்!

★

வடக்கு! வடக்கு!

இது தான்

வடக்கு ! வடக்கு !

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தூத்துக்குடி துறைமுகத் திட்டம் இடம் பெருது என்பது தெளிவாகி விட்டது!

30 கோடி ரூபாய் செலவாகும் என்பதற்காக இந்தத் திட்டம் கைவிடபபட்டிருட்டதாகச் சொல்லப்படுகிறது!

ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரால் கோடி கோடியாகப் பாழாக்கி வருகிறுர்கள்!

கோடிக் கணக்கில் செலவிட்டு பாலைவனங்களை பசும் சோலையாக்கி வருகிருர்கள்! தேவையற்ற இடங்களுக்கெல்லாம் தேவையற்ற திட்டங்களைத் தீட்டி பணத்தைப் பாழாக்கி வருகிருர்கள்!

வடக்கிலுள்ள கண்டலா துறைமுகம் அவசியமா? அந்தத் துறைமுகம் இல்லாவிட்டால் வடக்கு வளமிழந்தா விடும்!

கண்டவா துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி நடைபெறுவதில்லை! அதற்கேற்ப வசதியும் அதில் கிடையாது! ஆனல் இதைச் செடபனிட கோடிக் கணக்கில் செலவிட்டிருக்கிருர்கள்!

தூத்துக்குடி துறைமுகத்திற்கு மட்டும் ஏன் செலவு செய்ய மனம் வரவில்லை!

தூத்துச்குடி துறைமுகம் செப்டனிடப் பட்டால், தெற்கு வளம் பெற்று விடும், வணிசத்தால் பெரும் செல்வத்தை ஈட்டி விடும் என்ற பொருமை தானே?

சண்டலா துறைமுசம் அவசிய மற்றது, தேவை யற்றது பயனற்றது—ஆனல் அது செட்டனிடப்பட்டிருக்கிறது—காரணம் அது வடக்கு!

தூத்துக்குடி துறைமுகம் பெயர் பெற்றது, பல்வேறு நாடுகளில் வணிகம் செய்து புகழ் பெற்றது! இதைச் செப்பனிட டணமில்லை—காரணம், இது தெற்கு!

"வடச்காவது, தெற்சாவது" என்று பேசிடும் தோழர்சள்—தோழர்களைக் கேட்டதை விட—நிதி அமைச்சர் இதற்கு வேறு காரணம் ஏதாவது இருந்தால் பதில் சொல்லட்டும்!

கண்டலா, வடக்கு, அது வாழ்கிறது!

தூத்துச்குடி, தெற்கு இது தேய்கிறது!

(6–ம் பக்கத் தொடர்ச்சி)

(தேர்தல் புரி யாத்திரை)

"எனக்கு அண்ணுவின் புத்தகங்கள் பிடிக்கும், அதற்கடுத்து உங்களுடைய புத்தகங்களைத்தான் அதிகமாகப்படிப்பேன்" அவன் எதை விரும்பினுனே அதையேதான் அவளும் சொன்னுள்!

இருண்டுக்கிடந்த வானம் வெளுக்க ஆரம்பித்தது! வண்டியும் சென்னையின் எல்லையை மிதித்து ஓட ஆரம்பித்தது!

"நீங்கள் உடனேயே ஊர் திரும்பி விடுவீர்களா?" என்று மறுசந்திப்பை எதிர்பார்த்துக் கேட்டான் அவன்!

"இல்லை, ஒருவாரம் செல்லும் நீங்கள்" என்ருள் அவள்!

"நாளைய தினம் மாநாடு,மாநாடு முடிந்தவுடன் ஊருக்குப் புறப்படுவேன்! என்று சுருக்கமாக நேரத்தைச் சொல்ல வைத்தான் அவன்!.

"மாநாடா? என்னமாநாடு" திகைப்பதைப் போல்கேட்டாள் அவள்!

"மாதர் மாநாடு, நீங்களும் வருகிறீர்களா" என்ருன் அவன்!

"மாநாட்டிற்கு நீங்கள் தான் தலைவரா" என்று கிண்டலோடு கேட்டாள்!

"நானு? அதெல்லாம் இல்லை! சற்குணு என்ற பெண் தலைமை வகிக்கிருர், சிறந்த பேச்சாளர"! என்று சுருக்கமாகச் சொன்னுன் அவன்!

"அப்படியா? சிறந்த பேச்சாளியா? நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?' என்று ஓரவிழிப் பார்வையால் அவனை நோக்கியபடி கேட்டாள்!

"நான் பார்த்ததில்லை, கேட்டிருக்கிறேன்" என்ருன் அவன்!

"நானும் சற்குணுவைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன்—முடிநதால் வருகிறேன்" என்ருள் அவள்!

"முடிந்தாலாவது—கட்டாயம் வரவேண்டும்!" என்று வேண்டிக்கொண்டான் அவன்!

வானத்தின் கிழக்கில் நீல நிறம் அழிக்கப்பட்டு செந்நிறம் பூசப்பட்டுக் கொண்டிருந்தது வண்டியும் அலுத்து சலித்து எழும்பூரில் வந்து நின்றது!

(தொடரும்

Registered as a Newspaper in CEYLON

இலங்கையில் 20 சதம்

Regd. No. M. 7074 **MALAIMANI** விலை 16 காசு **Phone 83285**

(சம்பத் பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் கூறவில்லை. பிராம்சரி நோட்டு கூட எழுதிக்கொடுத்து தவணை கேட்டான்.

அதுபோன்றுதான் நாம் கோரியிருந்த கோரிக்கைகளை அலட்சியப்படுத்தி பேசி வந்த டில்லி அமைச்சர்கள் இன்று கடிதம் எழுதி நமக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே நம்மை இழித்து கேவலம் பேசுகிறவர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. நமக்கு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது.

நான் இந்த நேரத்தில் நமது தோழர்களுக்கும் ஒரு வேண்டுகோள்விடுக்க விரும்புகிறேன்.

நாம் நமது உரிமையைப் பெறுவதற்கும், இந்தியை எதிர்ப்பதற்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

நமது போர்படையை வலுவாகப் பெருக்க வேண்டும். நம் கழகத்திற்கு வலு வேற்படும் வகையில் பாடுபட வேண்டும் நமக்கு நமது அண்ணா அவர்கள் வழி காட்ட இருக்கிறார். ஆகவே நீங்களெல்லாம் ஒன்றுபட்டு உழைக்க முன் வர வேண்டும்.

நீங்களெல்லாம் காட்டிய ஆர்வத்திற்கும், உற்சாகத்திற்கும் உங்களையெல்லாம் பாராட்டுவதுடன் வாழ்த்தும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

வணக்கம்!

★★

வருந்துகிறோம்!

சின்னாளப்பட்டி "மாலை மணி" விற்பனையாளரான தோழர் எம். பழனிச்சாமி அவர்களின் அன்னையார் சௌரம்மாள் அவர்கள் 4-8-60 அன்று காலமானார் என்ற செய்தி அறிந்து மெத்த வருந்துகிறோம்.

அன்னையை இழந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கும் தோழருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைக் தெரிவித்துக் கொள்கிறோம்.

(கருணாநிதி பேச்சு)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் படிக்கக் கேட்டு புரிந்து கொள்ள வேண்டுமென்றால் இந்திய குடியரசுத் தலைவர் கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்படுகிறது-என்பதற்கு இது தான் பொருளா?

இந்த அட்டையில் இருக்கின்ற விஷயத்தை புரிந்து கொள்ள முடியாத தமிழனுக்கு இது அவனுடைய மானத்தை உறிஞ்சும் அட்டை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

இந்த மாதிரியான சங்கடங்களை ஒழிப்பதற்காக அரசியல் சட்டத்தை மாற்றியமைக்காவிட்டால், மொழி வகையில் ஏற்படும் இன்னல்கள் ஒழியவே ஒழியாது!

கவர்னர் ஆற்றிய உரையில் மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் பற்றி எதிர்கட்சிகள் தங்களது கருத்துகளை தெரிவிக்க வேண்டுமென்று விரும்பியிருக்கிறார்; அதற்காக நான் அவரை மெத்தவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாங்கள் எங்கள் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு என்றுமே தயங்கவில்லை—தயாராகவே இருக்கிறோம்.

இதற்காக நிறுவப்பட்டிருக்கின்ற சிறப்புக் கமிட்டிகளிலும் ஏனைய நிறுவனங்களிலும் எங்களால் தரப்படும் கருத்துகள் ஏற்கப்படுகின்றனவா? அதற்கு மதிப்பு தரப்படுகிறதா? நாங்கள் கூறுபவைகளுக்கு சிறப்பு கொடுக்கப்படுகிறதா? குழுவின் முடிவு ஏற்கப்படுகிறதா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1000 கோடி ரூபாய் வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் குழுவில் தெரிவித்தார். ஆனால், நம்—நிதி அமைச்சர் சங்கற்பட்டில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் 1000 கோடி ரூபாய் தேவை என கேட்ட எங்கள் அண்ணாவை 'பண்டாரம்' என இகழ்ந்து கூறினார். அதே நேரத்தில் தமிழகத்தின் வளர்ச்சிக்கு 1000 அல்ல 2000 ரூபாய் தேவை என அறிவித்தது லோகநாதன் கமிட்டி! ஆனால் நமது நிதியமைச்சர் அவரை இரட்டைப் பண்டாரம் என அழைத்தாரா?—இல்லையே!

நாங்கள் எந்த நல்ல கருத்தை முன் வைத்தாலும் அதை வெளியில் வந்து "அண்ணாத்துரை காசப்புக்கடைவைக்கச் சொல்லுகிறார்"—"கருணாநிதி கடல் பாசி அல்வா இண்டச் சொல்கிறான்" என்றெல்லாம் நையாண்டி பேசுகிறார்கள்.

நான் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு சபாநாயகர் மூலம் கூற ஆசைப்படுகிறேன்; நல்ல கருத்துகளைக் கூறும் எங்களை நையாண்டியும் கேலியும் செய்யாதீர்கள் என்று!

இந்த தமிழகத்திற்கு தமிழ் நாடு என்ற பெயரிட வேண்டுமென்பதற்காக உண்ணாவிரதமிருந்து சங்கரலிங்கனார் உயிர் விட்டார். ஆனால், ஒரு உயிர் பலியானதும் உதகை மண்டலத்தில் அரசினரால் வாங்கப்பட்ட ஒரு சிறு மாளிக்கு தமிழகம் என பெயரிட்டார்கள்.

நான் இந்த மன்றில் உரைக்க ஆசைப்படுகிறேன்—இந்த மாநிலத்திற்கு தமிழகம் என்ற இன் பெயரிடுவதற்கு எத்தனை பிணம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று எழுத்திற்கு எழுத்து ஒரு பிணம் கேட்டாலும்—உவகையோடு கொடுக்கக் காத்திருக்கிறோம்!

நம்முடைய காட்டிலே சட்டியிலே இருந்தால் தான் அகப்பையில் வரும் என்ற பழமொழியை எல்லோரும் அறிவர். மத்திய சர்க்கார் என்ற சட்டியில் பத்தாயிரம் கோடி ரூபாய் இருக்கிறது அதில் 1000 கோடி ரூபாய் நமக்கு வேண்டுமென கேளுங்கள் என நாங்கள் கூறுகிறோம். உங்களால் கேட்டுப் பெற முடியவில்லை என்றால்—உங்களிடம் காம்பு மட்டும் இருக்கிறது, அகப்பை இல்லை என்பது தான் பொருள்!

இந்த மாநிலத்தை ஆளுகின்றவர்கள் மிக நல்லவர்கள்—மிக மிக நல்லவர்கள். ஆனால், வடவர்களிடம் போராடி வெற்றி பெறுகின்ற வல்லமையற்றவர்கள் அவர்கள்!

நமது நிதியமைச்சர் அவர்கள் தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி பற்றி நமக்குக் கொடுத்த வாக்குறுதியை அவர் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு—இந்தியக் குடியரசுத் தலைவர் தனது ஊதியத்தை குறைத்துக் கொண்டதைப் போல இம்மாநில மதிப்பிற்குரிய கவர்னரும் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறேன்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.